Sale of old tractors

* 380 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether old tractors with trawlers have been sold by the Agricultural Department during the calendar year 1972–73; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) ஆம்.

(இ) புல்டோசர்கள் 20, டிராக்டர்கள் 16.

திரு. என். டென்னிஸ் : இவற்றைக் கடன் அடிப்படையில் விவசாயிகளுக்குக் கொடுப்பது பயனுள்ளதாக இருக்காதா? அதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இவை எல்லாம் old, decrepit condemned tractors and trawlers அதைக் கடனுக்கு வாங்க யார் முன்வருவதாக இருந்தாலும் கொடுக்கத் தயார்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இவை டெண்டர் மூலமாக விற்கப்பட்டதா? கொட்டேஷன் கேட்கப்பட்டதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : நான் கொடுத்த புள்ளி விவரம் 1972-73-க்குரியது. என்னுடைய பைலில் எல்லா டிராக்டர்களும், புல்டோசர்களும் பொது ஏலத்தில் அல்லது டெண்டர்கள் மூலமாகவே விற்பனை செய்வதாக குறிப்பு இருக்கிறது.

Rural Roads Development Scheme

* 381 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether any Rural Roads Development Scheme has been introduced in this State to benefit roads in the Panchayat Unions : and

(*b*) if so, the details thereof?

1973 நவம்பர் 24]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஆம்.

(இ) ஊர்ப்புறங்களில் சாலை வசதி செய்வதின் நிமித்தம், முதற்படியாக எல்லா காலங்களுக்கும் ஏற்றபடி இணைப்புச் சாலைகள் போடவும், ஏற்கனவே போடப்பட்டுள்ள சாலைகளை மேம்படுத்தவும், 1,500 மக்கட்தொகைக்கும் அதற்கு மேற்பட்ட குடியிருப்புகளை பராமரிக்கப்படும் சாலைகளுடன் அவைகளை இணைக்கவும் ரூ. 19.00 கோடி செலவில் அரசு ஒரு திட்டத்துக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

463 கி.மீ. நீளமுள்ள புதியசாலைகள் அமைக்கவும் 2,351 கி.மீ. நீளமுள்ள சாலைகளை மேம்படுத்தவும் முதல் இரண்டு கட்ட வேலைப் பட்டியல்களுக்கு ரூ. 11.00 கோடி செலவு செய்ய அரசு அனுமதி வழங்கியுள்ளது.

இத்திட்டத்தின் செலவில் 50 சதவிகிதத்தை மத்திய அரசு ஏற்கும்.

திரு. என். டென்னிஸ் : தலைவர் அவர்களே, மத்திய அரசின் வேலைவாய்ப்பு திட்டத்தின் மூலம் வெட்டப்பட்ட பல சாலைகள் பழுதடைந்துள்ளன. அவைகளைப் பராமரிக்கவும் இந்தத் தொகை பயன்படுத்தப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, அவைகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது.

திரு. தி. பொன்னுமலை : தலைவர் அவர்களே, ஒவ்வொரு கிராமத்திலே இருக்கிற பெரிய சாலைக்கு இணைப்புப் பாதை போட வேண்டுமென்றால் அந்த பஞ்சாயத்திலே சிறிய தொகை கட்ட வேண்டுமென்று சொல்கிறார்கள். அந்தப் பஞ்சாயத்திலே பணம் இருப்பதில்லை. அதனால் அந்த சாலை வேலைகள் நின்று விடுகின்றன. அதோடு சாலைகள் போட வேண்டுமானால், 10 விவசாயிகள் நிலத்தை இனமாக விட்டுவிடுகிறார்கள். ஆனால், ஒரு விவசாயி நிலத்தை விடவில்லையென்றால் கூட, இவ்வேலை தடைப்பட்டு விடுகிறது. ஆகவே, அந்த நிலத்தை எடுத்துக்கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அதிகாரம் அளிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

[1973 நவம்பர் 24

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, நிதி வசதி இல்லாத ஊராட்சி மன்றங்களுக்கு நிதி வசதி ஏற்படுத்துவதற்காக 'ஊரக சாலை வளர்ச்சி நிதி' என்ற ஒரு நிதியை ஏற்படுத்தி, அந்த சாலைகளில் ஓடுகின்ற பஸ்களின் மேல் விதிக்கப்படுகின்ற வரிகளை அந்த நிதியில் சேர்த்து, அந்த இரண்டையும் ஒன்றாக வைத்து, அதோடு மத்திய அரசிடமிருந்து அந்தத் திட்டத்திற்கு கிடைக்கிற 50 சதவிகித மானியத்தைச் சேர்த்து வைத்து, பொதுவாக அந்த நிதி இதற்குப் பயன்படுத்தப் பட்டு, ரோடுகளுக்காகச் செலவு செய்யப்பட்டு வருகிறது.

உறுப்பினர் அவர்கள் கூறிய இரண்டாவது பகுதியைப் பொறுத்து, மாவட்ட கலெக்டர்களுக்கு சட்டப்படி அதிகாரம் இருந்தாலும், அவசர அவசியத்தை முன்னிட்டு எடுக்கப் பட்டாலும், அது உயர்நீதிமன்றத்திலே தடுத்து நிறுத்தப்பட்ட காரணத்தாலே, அத்தகைய நிலை சில இடங்களிலே இருக்கிறது. அவற்றையும் தீவிரமாகச் செயலாற்ற ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, இணைப்புச் சாலை என்ற தலைப்பிலே பல கிராமங்களையும் சேர்ப்பதற்கு கலுங்குகள், சிறுசிறு பாலங்கள் தேவையாக இருக்கின்றன. அதே மாதிரி வேறு சில மேம்பாலங்களும் தேவைப்படுகின்றன. அதைச் செய்ய அரசு திட்டமிடுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, 1,500 ஜனத்தொகைக்கு மேற்பட்ட மக்கள் இருக்கிற பகுதிக்கு அந்த இணைப்புச் சாலைகளைப் போடுவதற்குத் திட்டம் இருக்கிறது. இப்பொழுது தமிழக அரசு, 3, 4 கிராமங்கள் சேர்ந்து ஒரு ஊராட்சியாக இருக்குமானல், அந்த இணைப்புச் சாலையையும் அதோடு சேர்த்துப் போட ஏற்பாடு செய்து வருகிறது. இடையிலே இருக்கிற கல்வெர்ட்டுகள், சிறு கல்வெர்ட்டுகள் இவைகளை எல்லாம் சேர்க்க இப்பொழுதே வசதி இருக்கிறது. பெரும் பாலங்களைச் சேர்க்க வசதியில்லை.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவர் அவர்களே, இந்தக் கிராமச் சாலைகள் இணைப்புத் திட்டத்தின் காரணமாக, பஞ்சாயத்துக்களுக்குப் பணம் இருந்தாலும் அல்லது அரசு பஞ்சாயத்துக்குப் பணத்தைக் கொடுத்து, அந்தத் திட்டத்தை

1978 நவம்பர் 24]

அமுல்படுத்துவதற்கு உதவி செய்தாலும்கூட, பல சாலைகளில் ஒரு பகுதி பஞ்சாயத்தைச் சேர்ந்ததாக இருக்கிறது, மற்றொரு பகுதி ஹைவேஸைச் சேர்ந்ததாக இருக்கிறது. அப்படிப்பட்ட ஹைவேஸைச் சேர்ந்த சாலைகளை எடுத்துக் கொண்டு, அந்தச் சாலையைப் போடுவதற்கு என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, கிராமப்புற சாலைகளில், ஊராட்சி மன்றங்களாலே பாதுகாக்கப்பட வேண்டிய சாலைகள் இருக்கின்றன, ஊராட்சி ஒன்றியங்களாலே பாதுகாக்கப்பட வேண்டிய சாலைகள் இருக்கின்றன. அடுத்து, பெருவழித் துறையினராலே பராமரிக்கப்பட வேண்டிய சாலைகள் இருக்கின்றன. ஏற்கனவே, அந்தச் சாலைகளில், பஞ்சாயத்து சாலைகளாக இருந்தாலும், ஊராட்சி ஒன்றியச் சாலைகளாக இருந்தாலும், 5 ஆண்டுகளுக்கு மேலே பஸ்கள் ஓட்டப்பட்டிருக்குமானால், அவைகளையும் பெருவழித் துறையே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று முடிவு எடுக்கப்பட்டு, அம்முறையில் இந்த ஆண்டு 1,000 கிலோ மீட்டர் எடுக்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவர் அவர்களே, பஸ்கள் ஓடுகின்ற சாலைகளைப் பற்றி கவலை இல்லை. பஸ்கள் ஓடுகின்ற பெரும் சாலைகளை எடுத்துக்கொண்டு திட்டங்கள் தீட்டுவது என்றால், கிராமப்புறங்களிலே பல சாலைகள் இருக்கின்றன, அவற்றை, பஞ்சாயத்தைச் சேர்ந்த சாலைகளை எல்லாம் பஞ்சாயத்து யூனியன் பராமரிக்க இயலாத காரணத்தால் அதற்கு ஆவன செய்ய அரசு என்ன செய்யும் என்பதுதான் என்னுடைய கேள்வி.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, அதைத்தான் முதலிலேயே சொன்னேன். 1,500-க்கு மேற்பட்ட ஊரகப் பகுதிகளைப் பராமரிக்கும் வகையில், இணைக்கும் வகையில், புதிய சாலைகளைப் போடவும், தற்சமயம் இருக்கும் சாலைகளை, அதோடு ஏற்கனவே போடப்பட்ட சாலைகளை மேம்படுத்த, சிறப்பு கிராமப்புறச் சாலைகளை அரசு வகுத்துள்ளது. அந்தத் திட்டங்களில், இப்பொழுது ஊராட்சிகளில், ஊராட்சி ஒன்றியங்களில் அப்படிப்பட்ட கிராமச் சாலைகளை எடுத்து செயல்படுத்துவதற்கும் அதிலே நிதி உதவி செய்யப்பட்டிருக்கிறது.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவர் அவர்களே, கிராமச் சாலைகளில் இருக்கிற சில சாலைகளைத்தான் நான் கூறுகின்றேன், மறுபடியும் வற்புறுத்துகின்றேன். என்னுடைய தொகுதியிலே பல சாலைகள் கிராமத்தைச் சேர்ந்தவைகள், சில ஹைவேஸைச் சேர்ந்திருக்கின்றன. அந்தக் காரணத்தினால் பஞ்சாயத்து யூனியன் திட்டமிட இயலாத நிலை இருக்கிறது. அதற்கு அரசு என்ன செய்யப்போகிறது என்பதற்கு கனம் அமைச்சர் அவர்களிடத்திலே இருந்து பதில் வேண்டும்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்திலே திருவரங்கம் தொகுதியிலே இருப்பதைப் பற்றிக் கூறுகிறார்கள் என்று கருதுகிறேன். அந்தத் தொகுதி பூராவும் எனக்கு நன்றாகத் தெரியும். அங்கே ஒரு பர்லாங், 2 பர்லாங் சாலைகள் ஹைவேஸுக்குச் சொந்தமாக இருக்கின்றனவே தவிர, முழுச் சாலைகள் இல்லை. அப்படிப்பட்ட சாலைகள் இந்த வருஷம் எடுத்துக்கொள்ளப்பட்டு, வேலை முடிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அடுத்த முறை அங்கு சென்று பார்ப்பார்களானால், அவர்களுக்குத் தெரியும்.

*** 382 வினா—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கிராமச் சாலைத் திட்டத்தின்கீழ் தார்ச்சாலை ஆக்கும் சாணுபுத்தூர்-மாதர்பாக்கம் (பொன்னேரி வட்டம்) சாலையை சாணுபுத்தூர் கிராமம் வரை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : மாதர்பாக்கத்திலிருந்து சாணுப்புத்தூர் வரை உள்ள சாலையை மேம்படுத்தும் வேலை 1972-73-ல் எடுத்துக் கொள்ளப்பட்டது. இவ்வேலை 1974-ம் வருடம் மார்ச்சு மாதம் முடிக்கப்பெறும்.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, அந்தச் சாலைகள் என் இந்தக் கிராமம் வரைக்கும் நீட்டிக்கப்படவில்லை என்பது தான் என்னுடைய மூலக் கேள்வி. அதனால்தான் அந்தக் கேள்வியே எழுந்தது. அதற்கான விடையை எதிர்பார்க்கிறேன்.